**தலைப்பு - 441 - ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோயக் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீளாய்வாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய அமைச்சாக இருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்காக தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதி தொகை ரூபா 65,376,800 ஆக இருந்த போதும் ரூபா 58,076,700 மாத்திரம் கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எனினும் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 41,810,000 மாத்திரமாக இருந்தமையால் ரூபா 16,266,700 கட்டுநிதி விநியோகிக்காமையினால் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் உள்ளபடியான தேவையின் பிரகாரம் கட்டுநிதி கோர வேண்டி ஏற்பட்டிருந்தது. | சரியான மற்றும் பொருத்தமான திட்டத்தின் பிரகாரம் கட்டுநிதி கோரப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை கீழே காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன மொத்த நிதியேற்பாடும் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,500,000 ஆன மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 1,300,000 அதாவது 80 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தில் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த குறைபாடுகள் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | சரியாகவும் பொருத்தமாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்கள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்ட முறையே ரூபா 265,000,000 மற்றும் ரூபா 8,000,000 ஆன நிதியேற்பாடு, குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும், நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலமும் முறையே ரூபா 603,000,000 இனாலும், ரூபா 35,350,000 இனாலும் அதாவது 100 சதவீதம் முதல் 300 சதவீதம் வரையான சதவீதத்தில் அதிகரிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) 07 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 06 மூலதன செலவின விடயங்கள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 61,500,000 நிதியேற்பாடுகளில் ரூபா 900,000 ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 60,600,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 17 மீண்டெழும் செலவின விடயங்கள் என்பவற்றுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 286,700,000 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 10,600,000 அதாவது செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 276,100,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 190,163,190 நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட இராஜாங்க அமைச்சரினதும், பதவியணியினதும் 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் 2022 ஆம் ஆண்டு முதல் பொறுப்புக்கள் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு | சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் |

| | | |
|---|---|---|
| தொலைபேசி பட்டியல்கள் மற்றும் ஏனைய செலுத்துவதற்குரிய பட்டியல்களின் கூட்டுமொத்தம் ரூபா 70,537 அட்டவணை (iii) மாதிரியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உளள்வாறான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பொறுப்புக்கள் பதிவேடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |

## 2.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப்பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், 2022 ஆம் ஆண்டு முதல் பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் கள் தொடர்பாக முறையான பிரகாரம் பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், 2022 ஆம் ஆண்டு முதல் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற மாதிரிகளின் படி இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபித்து பேணிச் | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செல்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு இலக்கினை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்டமுறைமையொன்று உள்ளமையை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | அரச நிர்வாக அமைச்சிற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்ட போதிலும் இதுவரையிலும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்தமையால் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் இராஜாங்க அமைச்சிற்காக கணக்காய்வு உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினாலும் அரச நிர்வாக அமைச்சிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 11 ஆந் திகதிய 2205/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கொவிட் - 19 மற்றும் ஏனைய பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு மற்றும் தொடர்புடைய சகல மாகாண மற்றும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல், தொற்றுநோய் பரவுவதை தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தாய் சேய் மரணங்கள் குறைந்த நாடாக பேணிச் செல்வதற்கு தாய் சேய் சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல், கிராமிய மக்களுக்கு இலகுவாக தமது சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் சகல பிரதேச மற்றும் ஆரம்ப வைத்தியசாலைகளில் வைத்தியர், தாதியர் மற்றும் ஏனைய உதவியாளர் வசதிகளை அபிவிருத்தி செய்தல், பிள்ளைகளின் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக உரிய நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல், ஆரம்ப சுகாதார சேவைகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், மக்களின் சுகாதார கல்வியினை மேலோங்கச் செய்வதற்காக சுகாதார மேம்பாட்டு மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல், கிராமிய, பின்தங்கிய மற்றும் நகர பிரதேசங்களில் குறைந்த | 2020 திசெம்பர் 11 ஆந் திகதிய 2205/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இராஜாங்க அமைச்சிற்கு அதிகாரங்கள் கையளிக்கப்படாதிருந்தமை உண்மையாக இருந்தமை, அந்த வர்த்தமானி பத்திரம் எங்களால் தயாரிக்கப்படாதிருந்தமை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் இராஜாங்க அமைச்சின் நோக்கங்கள் மற்றும் பணிகளின் கீழ் எங்களால் நிறைவேற்றப்படாத மற்றும் அதிகாரங்கள் கையளிக்கப்படாத விசேட பணிகள் குறிப்பிடப்படாதிருந்தமை. | இந்த நிலைமையை பொறுப்பு வாய்ந்த தரப்பினருடன் தொடர்புகொண்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்டு முதியோர் சுகாதார சேவை வசதிகளை விரிவுபடுத்துதல், சுகாதார சேவைகள் திணைக்களம், குடும்ப சுகாதார சேவை, மாகாண சுகாதார அமைச்சு மற்றும் திணைக்களம், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான சிகிச்சை நிலையங்கள் மற்றும் தாய்மார் சிகிச்சை நிலையங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி குறைந்த வருமானம் பெறும் மற்றும் கிராமிய மக்களின் சுகாதார சேவைகளை வலுப்படுத்தல் போன்ற இராஜாங்க அமைச்சிற்குரிய விசேட முன்னுரிமை பணிகளாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும், இராஜாங்க அமைச்சு இந்த பணிகளை நிறைவேற்றுவதற்குரிய கட்டளைகளை அமுல்படுத்துவதற்கான அல்லது நிறுவனங்களின் பணி பொறுப்புக்களை உள்ளடக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் இராஜாங்க அமைச்சின் நோக்கம் மற்றும் பணிகளின் கீழ் மேலே காண்பிக்கப்பட்ட விசேட முன்னுரிமை பணிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்குரிய வங்கி கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்ற மற்றும் பொருட்கள் போன்றவைகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற மூன்று உத்தியோகத்தர்களால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்காத உத்தியோகத்தர்களுக்காக பிணை வைப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உரிய சகல உத்தியோகத்தர் களிடம் இருந்தும் குறித்த பிரகாரம் பிணை வைப்பு பெறப்படல் வேண்டும். |

**3.3 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல் மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்துவதற்குரிய அறிக்கைகளை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் 2017 மே 12 ஆந் திகதிய திறைசேரி செயலாளரால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் DMS/0016 என்ற கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கைகளை உறுதிப்படுத்தக்கூடிய பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் 2017 யூலை 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படாதிருக்குமாயின் தற்போதைய சம்பளத்தின் பிரகாரம் மேலதிக நேரப்படி செலுத்தாதிருப்பதை கண்காணிக்க வேண்டுமென செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த சுற்றறிக்கையிலும், கடிதத்திலும் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை, வெளிச்செல்லல்களை குறிப்பிடாமல் இராஜாங்க அமைச்சினால் மீளாய்வாண்டின் போது சம்பளத்திற்காக ரூபா 12,821,220 தொகையும், மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளமாக ரூபா 5,572,534 | இராஜாங்க அமைச்சினால் கணக்கு நடவடிக்கைகள் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமான நிதியேற்பாடு வழங்கியதன் பின்னர் 2021 ஒக்தோபர் மாதம் முதல் நிறைவேற்றப்பட்டமை, அதுவரை சகல கணக்கு நடவடிக்கைகளும் சுகாதார அமைச்சின் கணக்குப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டமை, முன்னாள் இராஜாங்க அமைச்சு சுகாதார அமைச்சின் அறையொன்றில் நடாத்திச் செல்லப்பட்டமையால் அதில் கைவிரல் அடையாள இயந்திரத்தை பொருத்தும் தேவையொன்று காணப்படாதிருந்தமை, இராஜாங்க அமைச்சு சுகாதார அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்ட காலம் முழுவதும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்தமை, கைவிரல் அடையாள இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் முன்னர் இருந்த 15 இற்கும் குறைவான பதவியணியினருக்காக அவ்வாறான கொள்வனவு செய்தல் ஆக்கபூர்வமாக இல்லாதிருந்தமையால் நிறைவேற்றப்படாதிருந்தமை, காண்பிக்கப்பட்ட மேலதிக நேர செலவினங்கள் கௌரவ அமைச்சரின் பிரத்தியேக பதவியணியினரின் சாரதிகளை உள்ளடக்கிய | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| தொகையும் ஆக மொத்தமாக ரூபா 18,393,754 செலுத்தப்பட்டிருந்தது. | ஏனையவர்களினால் பெறப்பட்டிருந்தமை மற்றும் அவர்கள் கைவிரல் அடையாளம் வைக்காதிருந்தமை. |

**4. நல்லாளுகை**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1), 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(1)(i) மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் வருடமொன்றிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சிற்காக இதுவரையிலும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையினால் 2021 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாதிருந்த போதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 04 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் மேற்பார்வையின் கீழ் சமூக சேவைகள் திணைக்களம், முதியோர் செயலகம் மற்றும் 1990 சுவசெரிய அடிப்படையிலான நிறுவனங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்பு தொடர்பாக முறையாக ஆய்வு செய்யாமல் 80 பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மருத்துவ கட்டுப்பாட்டாளர் சேவை | இந்த அமைச்சு ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வர்த்தமானியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் முன்னால் இருந்த உத்தியோகத்தர்களால் அமைச்சின் பெயரை மாத்திரம் கருதி பதவியணியினர் அங்கீகரித்துக் | அமைச்சிற்கு கையளிக்கப் பட்டுள்ள விடயப் பரப்பினை கவனத்தில் கொண்டு தேவையான பதவியணியினர் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

பதவிக்குரிய கடமைகள் அந்த அமைச்சினால் நிறைவேற்றப்படுகின்ற போதிலும் மேலதிக செயலாளரை உள்ளடக்கிய மருத்துவ கட்டுப்பாட்டாளர் சேவையில் 05 பதவிகள் மற்றும் 03 மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் என்பன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு உரியதாகும். எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இராஜாங்க அமைச்சின் உள்ளபடியான ஒட்டுமொத்த பதவியணியினர் 15 பேர் மாத்திரமாகும்.

கொள்ளப்பட்டிருந்தமை, பின்னர் இது தொடர்பாக எங்களால் ஆய்வு செய்த பின்னர் தேவையற்ற பதவியணியினர் சேர்க்கப்படாதிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் இந்த அமைச்சிற்கு கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களின் பிரகாரம் தற்போது காணப்படுகின்ற பதவியணியினரை திருத்துவதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.